

# மொட்டுக்களின் மெட்டுக்கள்

## மழலைப் பாடல்கள்

இந்திராணி புஷ்பராஜா

# மொட்டுக்களின் மெட்டுக்கள்

## மழலைப் பாடல்கள்




இந்திராணி புஷ்பராஜா
(ஓய்வு நிலை அதிபர், முன்னாள் சேவைக்கால ஆலோசகர்
அதிபர் சாரதா பாலர் பாடசாலை)

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | - | மொட்டுக்களின் மெட்டுக்கள் |
| ஆசிரியர் | - | இந்திராணி புஷ்பராஜா |
| முகவரி | - | இல. 6 திருமகள் வீதி கிழக்கு<br>கல்லடி உப்போடை,<br>மட்டக்களப்பு. |
| மொழி | - | தமிழ் |
| முதற்பதிப்பு | - | 2016 |
| பக்கங்கள் | - | v + 31 |
| உரிமை | - | ஆசிரியருக்கு |
| ISBN | - | 978-955-7786-09-4 |
| அச்சகம் | - | எவகிறீன் அச்சகம்<br>185A, திருமலை வீதி,<br>மட்டக்களப்பு.<br>T.P. 065-2222607 |

# என்னுரை

"நான் இறைவனை கண்டேன், என் குழந்தை வடிவிலே
அவன் உரைகளைக் கேட்டேன் கொஞ்சும் மழலை மொழியிலே"

எனப் பாடினான்

ஒரு பாவலன் குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பார்கள். அதி அற்புதமான குழந்தைகளை சிந்தனைச் சிற்பிகளாக்குவது சூழலில் அவர்கள் பெறும் பொருத்தமான அனுபவங்கள்தான். கேட்டல் பேசுதல் வாசித்தல் எழுதுதல் எனும் நான்கு செயற்பாடுகளினூடாகவே மொழியை அவர்கள் அறிந்து கொள்கின்றனர். முதலிரண்டு செயற்பாடுகட்கும் உதவுவது அவர்கட்குப் பிடித்த பாடல்களே, மனோதத்துவவியலாளர்கள் குழந்தைகளின் விருப்புக்களை பல்வேறு வகைகளில் ஆய்ந்தறிந்துள்ளார்கள். அவ்வகையில் அவர்களால் வெளியிடப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பாடல்களை வடிவமைத்துள்ளேன். பல பாடல்கள் பிள்ளைகளால் மகிழ்வுடன் பாடப்பட்டவை அவற்றைத் தொகுத்து பலரும் பயனடையும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர்களுடன் பெற்றோரும் ஒன்றிணைந்து பாடல் மூலம் தமிழ் மொழியைப் பேசும் ஆற்றலைப் பிள்ளைகளிடம் வளர்க்குமுகமாக இதனை எமது பெற்றோர் கைகளில் வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தெய்வத் திருமூவரின் ஆசி உங்கள் பிள்ளைகட்குக் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

**இந்திராணி புஷ்பராஜா**

# அணிந்துரை

குழந்தைகள் மிக இனிமையானவர்கள், கைபடாத களிமண்போல் புத்தம் புதியவர்கள் சூழலில் நிகழும் மாற்றங்களைக் கொண்டே அவர்கள் கற்றுக்கொள்கின்றார்கள் மொழியை அவர்கள் புரிந்து கொள்ள உதவும் ஒரு சாதனம் பாடல்களும் கதைகளுமே பாடல்கள் குழந்தைகளின் உணர்வுகளுடன் பின்னிப் பிணைந்து அவர்களை மகிழ்ச்சி அடைய வைக்கின்றது பிள்ளைகட்குப் பிடித்த சூழலும், கதாபாத்திரங்களும் பாடல் கருக்களாக்கும் போது குழந்தைகள் விருப்புடன் பாடிப் பாடல்களை ரசிக்கின்றார்கள் தமக்கு மகிழ்வு ஏற்படும் வேளைகளில் எல்லாம் பாடல் பாடி மகிழ்கின்றார்கள்

இந்திராணி புஷ்பராஜாவின் மொட்டுக்களின் மெட்டுக்கள் மழலைகளின் மகிழ்விற்காக படைக்கப்பட்ட நூலாகும் இங்குள்ள சிறிய பாடல்கள் பிள்ளைகளை மகிழ்வூட்ட உருவாக்கப்பட்டதாகும். விவேகானந்தரின் எழுச்சிப்பாடலாக உருவாகும் முதற் பாடல் தொடக்கம் எண்களைக் குழந்தை மனதினுள் பதியவைக்கும் இறுதிப் பாடல் வரை ஒவ்வொரு பாடலும் பிள்ளைகள் பாடிமகிழும் பாடல்களாகும்.

இப்பாடல்களைக் குழந்தைகளோடு குழந்தையாக வாழ்ந்து அவர் படைத்திருக்கும் விதமே அவற்றைத் தனித்துவம் மிக்கதாக்குகின்றது குழந்தைகட்காக அவரது இத்தகைய முயற்சிகளை நான் வரவேற்பதோடு பணிதொடர வாழ்த்துகிறேன்.

**கலாபூசணம்**
**திரு. வை. க. கணேசானந்தம்**
**அகில இலங்கை சமாதான நீதவான்**

# புதிய சிறகுகளுடன் பறத்தல்

சிறுவர்களின் உலகத்தினை அனுபவிப்பதும் அவர்களின் ஆற்றல்களைக் கொண்டாடுவதும் எல்லோராலும் முடியாத காரியம். "சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது" என்ற பழமொழியும், சொல்லாடல்களும் எப்பொழுதும் சிறுவர்களின் திறன்களை ஆற்றல்களை அடக்கியே வந்திருக்கின்றன. அவர்களைத் தட்டிக் கொடுத்து அரவணைத்து முயற்சிக்கும் தந்திரங்கள் எங்களில் பலருக்கு கைவராத சமாச்சாரம்

இந்த முன்னூட்டல்களுடன் தான் நாம் சிறுவர் இலக்கியத்தை அணுக வேண்டியுள்ளது. இலக்கியத்தினூடாக சிறுவர்களின் உள ஆற்றலை வளர்த்தெடுத்தல் அவர்களை உந்து சக்தியாக்குதல், சிந்தனைத்திறனை விருத்தியடையச் செய்தலென பல்வகைமைகளை ஏற்படுத்துவதற்கு இலக்கியம் துணைகருவியாகின்றது. இந்தத் துணை கருவியை சிறுவர்கள் சிறுவர்களுக்காக பயன்படுத்துகின்றார்களா! அல்லது பெரியவர்களால் சிறுவர்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றதா! என்பதே மிக முக்கியமானது ஏனென்றால் பெரும்பாலும் பெரியவர்களால் சிறுவர்களுக்கு எழுதப்படும் சிறுவர் இலக்கியமே எங்களிடம் உள்ளது. இவ்வாறு எழுதும் எழுத்தாளர்கள் சிறுவர்களின் உலகத்தோடு பரீட்சயமற்றுப்போனால் அது சிறுவர்களின் திறன்களை, ஆற்றல்களை மழுங்கடிக்கின்ற நிலைக்கு வழிவகுத்துவிடும்.

அதிஷ்டவசமாக இந்திராணி புஷ்பராஜாவின் படைப்புக்கள் குழந்தைகளுக்கு கொண்டாட்டத்தைக் கொடுப்பதாக அமைகின்றன. தனது 35 வருட கால ஆசிரியர், அதிபர் தொழிலினூடாக மாணவர்களின் உறவுகள், நடத்தைகள், பழக்கவழக்கங்கள் என்பனவும் அவரின் அனுபவச் செயல்வாதமும் ஆசிரியர் தொழிலின் இளைப்பாறிய பின்னரான பாலர் பாடசாலையின் அதிபராக இருந்து குழந்தைகளுடன் வாழ்கின்ற சூழலும் அவரை குழந்தைகளுக்கான கதைசொல்லியாக பாடலாசிரியராக பரிணமிக்க வைத்திருக்கின்றது. இந்தப் பரிணமித்தலே குழந்தைகள் கேட்டு,

அனுபவித்த கொண்டாடிய பாடல்களை நூலாக வெளியிடும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

இந்திராணி அதிபரினுடைய பாடல்கள் குழந்தைகளின் ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வளர்த்தெடுப்பதோடு ஒவ்வொரு குழந்தையும் தன்னம்பிக்கையுடன் வெற்றி கொள்ளுதல், இயலாமை யைத்துறந்து முடியுமென்ற உந்து சக்தியைக் கொடுக்கின்ற கதை சொல்லியாகவும் பாடலாசிரியராகவும் விரிவடைந்துள்ளது. குழந்தைகளை மண் விளையாட்டிலே தெரியும் என்பார்கள் இதற்கு மறுதலையாக இந்திராணி குழந்தைகளின் உளத்தில் விளையாட்டினை ஏற்படுத்தி மகிழ்ச்சியை உண்டு பண்ணி அவர்கள் அறியாமலே அவர்களிடம் நம்பிக்கையை கட்டியமைக்கின்ற பெரும் கைங்கரியத்தை கதைகளினூடாகவும் பாடல்களினூடாகவும் படைத்துள்ளார்.

சிறுவர்களைவிட கீழ்படிநிலையில் இருப்பவர்கள் குழந்தைகள் அவர்களுக்கு புரியும் மொழியில் விளங்கும் தன்மையில் பாடல் பாடுவ தென்பது எளிதான விடயமல்ல இன்றைய குழந்தைகள் நாம் சொல்லுகின்ற விடயம் விளங்கவில்லையென்றால் மண்டு, மொக்கு என நாமங்களைச் சூடி விட்டு அவர்கள் பாதையிலே போய்க்கொண்டிருப்பார்கள் இந்திராணி அவற்றினை யெல்லாம் புரிந்து தெரிந்து, அதற்குள்ளே உழன்று குழந்தைகளின் மொழியில் இத்தொகுப்பை வெளிக்கொணர்ந்திருப்பது பாராட்டத்தக்கது. அவரின் முயற்சி தொடர என் வாழ்த்துக்கள்

நட்புடன்

**த. மலர்ச்செல்வன்**

மாவட்ட காலாசார இணைப்பாளர்

மட்டக்களப்பு.



## விவேகானந்தர்

விழித்துக் கொள்ளுங்கள்
எழுந்து நில்லுங்கள்
இலக்கு நோக்கியே
நடந்து செல்லுங்கள்



ஆற்றல் எம்மிடம்
அடங்கிக் கிடக்குதே
மாற்றிக் காட்டுவோம்
உலகை நாங்களே

வீரத்துறவியே!
விவேகானந்தா!
உங்கள் வழியிலே
நாங்கள் வருகிறோம்

## கடமை

காலை வேளை எழும்புவோம்
கடவுளை நாம் வணங்குவோம்
உண்டு உடுத்து நாங்களும்
பள்ளிக்கூடம் செல்லுவோம்



பாடி ஆடி மகிழுவோம்
பாடங்களும் படிப்போம்
கூடி ஒன்றாய் குலாவுவோம்
குருவிகள் போல் பறப்போம்

எண்ணும் எழுத்தும் அறிவோம்
எமது குருவைப் பணிவோம்
மண்ணில் வீடு கட்டுவோம்
மகிழ்ந்து நாமும் வாழுவோம்

## குருவிகள் நாங்கள்

சின்னஞ் சிறிய குருவிகள் நாங்கள்
சிறகு முளைத்த சிட்டுகள் நாங்கள்
வண்ண சிறகை விரிப்போம் நாங்கள்
வானில் எழுந்து பறப்போம் நாங்கள்



பாடும் சின்னக் குயில்கள் நாங்கள்
மழலை பேசும் கிளிகள் நாங்கள்
நாளை உலகில் நாயகர் நாங்கள்
நல்ல செயல்கள் செய்வோம் நாங்கள்

அன்னை மடியில் மலரும் மொட்டுகள்
மண்ணைப் பொன்னாய் மாற்றும் சிற்பிகள்
குறும்பு செய்து மகிழ்வோம் நாங்கள்
கோடி விந்தை புரிவோம் நாங்கள்

# வண்ண வண்ண பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வடிவான பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
காற்றில் ஆடும் பூக்கள்



செடியில் பூக்கும் பூக்கள்
சுகந்தமான பூக்கள்
கொடியில் ஆடும் பூக்கள்
கொத்துக் கொத்தாய் பூக்கள்

சிவப்பு ரோஜாப் பூக்கள்
வெள்ளை மல்லிகைப் பூக்கள்
மஞ்சள் வண்ணப் பூக்கள்
மலர்ந்த லிங்கப் பூக்கள்

# நிறங்கள்

நீல நிற வானத்திலே மஞ்சள் குருவி பறக்குது
பச்சைநிற மரத்தின் மீது சிவப்பு பூ பூக்குது



வெள்ளை நிறச் சட்டைபோட்டு
அக்கா பள்ளிக்கு போகிறாள்
கறுப்பு நிற குடை பிடித்து
மாமா சந்தைக்குப் போகிறார்



மஞ்சள் நிற சூரியனும்
காலைவேளை உதிக்கிறான்
வெள்ளைநிற பால் குடிக்க
அம்மா என்னை அழைக்கிறாள்



# என் அம்மா

ஆசை அம்மா வந்தாள்
அன்பு முத்தம் தந்தாள்
நேசமாக என்னை
நெஞ்சோடெடுத் தணைத்தாள்



சோறும் கறியும் சமைத்து
சுவையாய் உண்ணத் தந்தாள்
பாலும் பழமும் தந்தாள்
படிப்பும் சொல்லித் தந்தாள்

பாட்டும் கதையும் சொல்லி
இரவில் தூங்க வைப்பாள்
பண்பைச் சொல்லித் தருவாள்
அன்பைக் காட்டி அணைப்பாள்

# நாய்க்குட்டி

எங்கள் வீட்டு நாய்க்குட்டி
எனக்குப் பிடித்தநாய்க்குட்டி
துள்ளி ஓடி வந்திடும்
செல்லமான நாய்க்குட்டி



பட்டுப் போன்ற கால்களால்
பந்தடிக்கும் நாய்க்குட்டி
சிட்டுப் போல பறந்தோடும்
செல்லமான நாய்க்குட்டி

பாலை நன்றாய் குடித்திடும்
வாலை ஆட்டி மகிழ்ந்திடும்
நான் விரும்பும் நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி

# பொம்மை

கண் சிமிட்டும் பொம்மைபார்
கைகள் தட்டும் பொம்மைபார்
கரடிப் பொம்மை காலினாலே
பந்தடிக்கும் அழகைப்பார்

பேசுகின்ற பொம்மைபார்
பாடுகின்ற பொம்மைபார்
ஆடி ஓடி அழகுகாட்டி
துள்ளும் குருவி பொம்மைபார்




## எறும்பு



சின்னச் சின்ன எறும்புகள்
வரிசையாகப் போகுதே
அங்கே இங்கே ஓடாமல்
நேர்வழியில் போகுதே
ஒன்றன் பின்னால் ஒன்றாக
ஊர்ந்து ஊர்ந்து போகுதே
அரிசி மணிகள் தூக்கிக் கொண்டு
ஆடி அசைந்து போகுதே
சுவரின் மேலே ஏறுதே
வளையின் உள்ளே நுளையுதே
சுறுசுறுப்பாய் எறும்புக் கூட்டம்
சோம்பலின்றி விரையுதே

# நிலவு



வட்டமான நிலவு வடிவான நிலவு
வெள்ளித் தட்டுப் போல
விரைகின்ற நிலவு
நட்சத்திரங்கள் மத்தியில்
நீந்திப் போகும் நிலவு
இரவில் எங்கள் ஊருக்கு
வெளிச்சம் தரும் நிலவு
பூரணை நாளிலே
முழுதாய் வரும் நிலவு
அமாவாசை நாட்களில்
ஒழிந்து கொள்ளும் நிலவு

# தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டத்தை
பார்க்க ஓடி வாருங்கள்
எத்தனை காய் கறி இங்குண்டு
எண்ணிப் பார்ப்போம் வாருங்கள்



நீல நிறக் கத்தரிக்காய்
நீண்ட நெடிய முருங்கைக்காய்
குண்டு குண்டுப் பூசணிக்காய்
கொடியில் ஆடும் பாகற்காய்



பாம்பு போன்ற புடலங்காய்
பச்சைநிற மிளகாய்
விரல்போல் நீண்ட வெண்டிக்காய்
கொடியில் செடியில் பயற்றங்காய்

# பூனை

பூனையாரே பூனையாரே

எங்கே போறிங்க

மீன் பிடிக்க மீன் பிடிக்க

ஆற்றிற்கு போறன் நான்

ஆற்றுக்கு போய் மீன் பிடிச்சு

என்ன செய்வீங்க



கறி சமைத்துப் பொரியல் வைத்து

சாப்பிடுவேனே

சாப்பிட்ட பின் சாப்பிட்ட பின்


என்ன செய்விங்க

அடுப்படியில் சுருண்டு நானும்

படுத்துக் கொள்வேனே

# மின்னல்

பளிச் பளிச் பளிச் பளிச்
மின்னல் மின்னுது
டுமார் டமார் டமார் டமார்
இடி இடிக்குது



சூய் சூய் சூய் சூய்
காற்றடிக்குது
சட சட சட சட
மழை பொழியுது

மழை நீரில் மழை நீரில்
மண் நனையுது
மண்ணில் விழுந்த நீரங்கே
பாய்ந்தோடுது

மரங்களெல்லாம் மழையில் நனைந்து
மகிழ்ச்சி கொள்ளுது
மகிழ்ச்சியாலே தலையசைத்து
ஆட்டம் போடுது

## மீன் வியாபாரி

மீன் வாங்கலையோ நீங்கள் மீன் வாங்கலையோ

மீன் விற்க வந்திருக்கேன்

மீன் வாங்கலையோ

சூரை மீன் பாரைமீன்

மீன் வாங்கலையோ

கெழுத்திமீன் கெண்டைமீன்

மீன் வாங்கலையோ



மலிவு விலையில் தந்திடுவேன்

மீன் வாங்கலையோ

ஐயாமாரே அம்மாமாரே

மீன் வாங்கலையோ

## வண்ணாத்தி நான்

வண்ண வண்ண சட்டை போட்டு
வண்ணாத்தி நான் வந்திருக்கேன்
கண்ணைக் கவரும் ரோஜாப்பூவே
காலையிலா பூத்தாய் நீ



வண்ண வண்ண சட்டை போட்டு
வந்திருக்கும் தோழரே
கண்ணைக் கவர கருத்தைக் கவர
காலையில் தான் பூத்தேன் நான்




இனிய தேன் சுமந்து நீங்கள்
எங்களுக்கு உணவு தந்தீர்
அருமையான நறுமணத்தால்
அவனியெங்கும் மகிழவைத்தீர்



அர்ச்சனைப் பொருளானோம்
அழகுமாலை சரமானோம்
அம்மா அக்கா கூந்தல்மீது
அழகுதரும் அணியானோம்

## புகைவண்டி

சுக்கு சுக்கு சுக்கு சுக்கு
சுக்கு சுக்கு புகைவண்டி
தண்டவாளம் மீதிலேறி
தாவியோடும் புகைவண்டி




அம்மா அப்பா மாமி மாமா
ஏற்றிப் போகும் புகைவண்டி
பாம் பாம் சத்தம் போட்டு
பாய்ந்து ஓடும் புகைவண்டி

சிவப்புக் கொடியை முன்னால் காட்ட
சிக்கென்று நிற்கும் புகைவண்டி
பச்சைக் கொடியை பட்டென்று காட்ட
சிட்டெனப் பறக்கும் புகைவண்டி

## பறவைகள்

காகா என்று கரைந்து காகம்
என்ன சொல்லுது
ஒற்றுமையாய் வாழ்கவென்று
உரத்து அது சொல்லுது



கீகீ என்று பச்சைக் கிளி
என்ன சொல்லிப் பேசுது
அழகு தமிழில் பேசு என்று
அழகாய் சொல்லிப் பேசுது



கூகூ என்று குயில் குஞ்சு
என்ன சொல்லி பாடுது
கூட்டமாகச் சேர்ந்து பாடும்
வழியைச் சொல்லிப் பாடுது



கொக்கரக்கோ சேவல் அங்கே
என்ன சொல்லிக் கூவுது
விடிந்து விட்டது எழுங்கள்
என்று சொல்லி அது கூவுது



## திருவிழா

காட்டிலொரு திருவிழா
கலகலப்பாய் நடக்குது
காண ஓடி வாருங்கள்
கைகள் தட்டி மகிழுங்கள்



கரடிக் கூட்டம்- மேளம் கொட்டுது அங்கே
குரங்குக் கூட்டம் தாளம் தட்டுது
குயில் கூட்டம் பாட்டுப்பாடுது அதற்கு
மயில் கூட்டம் ஆட்டம் ஆடுது



முயல் கூட்டம் கும்மி கொட்டுது - அங்கே
நரிக் கூட்டம் குரவைபோடுது
மான் கூட்டம் கரகமாடுது கொம்பு
யானைக் கூட்டம் சங்கூதுது



## கிளியக்கா

சின்னச் சின்னக் கிளியக்கா
செல்லப் பெயரை சொல்லக்கா
என்ன வேண்டும் கேளக்கா
எடுத்துத் தாரன் உண்ணக்கா




பட்டுச் சிறகை விரியக்கா
பறந்து நடனம் ஆடக்கா
பாட்டுச் சொல்லித் தரட்டுமா
பறந்து நானும் வரட்டுமா

# பட்டம் பறக்குது

பட்டம் பறக்குது
பட்டம் பறக்குது
பார்க்க ஓடி
வாருங்கள்
பட்டம் பறக்குது
பட்டம் பறக்குது
பிடிப்போம் கைகள்
தட்டுங்கள்

மஞ்சள் பட்டம்
எந்தன் பட்டம்
வானில் பறக்குது
பாருங்கள்
உந்தன் பட்டம்
நீலப் பட்டம்
நீள வாலுடன்
பாருங்கள்



குரங்குப் பட்டம்
பாருங்கள்
கழுகுப் பட்டம்
பாருங்கள்
கப்பல் பட்டம்
வானில் மிதந்து
சாகசம் செய்யுது
பாருங்கள்


# நான்

கண்கள் உள்ளன நாங்கள் பார்ப்பதற்கு
காதுகள் உள்ளன நாங்கள் கேட்பதற்கு
மூக்கு உள்ளது நாங்கள் மணப்பதற்கு
நாக்கு உள்ளது நாங்கள் சுவைப்பதற்கு
கைகள் உள்ளன வேலை செய்வதற்கு
கால்கள் உள்ளன நாங்கள் நடப்பதற்கு



## எங்கள் நாடு

இலங்கை எங்கள் நாடாகும்
இந்து சமுத்திர முத்தாகும்
அழகிய சிறிய தீவாகும்
அதுவே எங்கள் சொத்தாகும்



மலைகள் நிறைந்த நாடாகும்
நதிகள் பாயும் நாடாகும்
கறுவா ஏலம் தேயிலையும்
செழிப்பாய் விளையும் நாடாகும்

பௌத்தர் இந்து கிறிஸ்தவர் முஸ்லீம்
அனைவரும் ஒன்றாய் வாழுகிறோம்
சிங்களம் தமிழும் சிறப்புடன் பேசி
ஒற்றுமையாக வாழுகிறோம்

# முயல்கள்

வெள்ளை நிற முயல்கள்
துள்ளி ஓடும் முயல்கள்
அள்ளி அணைக்கத்தோன்றும்
அழகான முயல்கள்

நீண்ட காதை ஆட்டி
சத்தம் கேட்கும் முயல்கள்
சிவந்த கண்ணைக் காட்டி
என்னை மயக்கும் முயல்கள்



# காலை

மஞ்சள் நிறச் சூரியன்
எழுந்து விட்டதே
மரங்கள் தோறும் பூக்கள் பூக்க
தொடங்கிவிட்டதே



வண்டுகள் ரீங்காரம்
செய்கின்றதே
காலை வேளை இனிமையாக
உதயமானதே

பறவைகளும் எழுந்து வானில்
பறக்கின்றதே
விலங்குகளும் இரைதேட
விரைகின்றதே
மனிதர்களும் எழுந்து கடமை
செய்கின்றாரே
இனிமையான காலைவேளை
உதயமானதே

## அணில்

தாவித் தாவிப் பாய்ந்தோடும்
அணில் குஞ்சே நில்லு
ஓடி ஆடி என்ன தேடி
போகின்றாயோ சொல்லு



கொய்யாப்பழம் மாம்பழம்
கொண்டு வரவா கேளு
பைய வந்து எந்தன் தோழில்
ஏறி விளையாடு
மூன்று கோடு முதுகில் போட்ட
ஆளை எனக்கு காட்டு
முத்தம் தருவேன் உனக்கு நானும்
முகத்தை முன்னால் நீட்டு

## பசு


எங்கள் வீட்டு வெள்ளைப் பசு

ஈன்றது சின்னக் கன்று ஒன்று

துள்ளிக் குதித்தது ஓடுது பார்

தூக்கி அணைத்திட

ஆசையம்மா



தாயிடம் பாலைக் குடிக்குதம்மா

தாவி ஓடி மகிழுதம்மா

அம்மா என்று அழைத்தவுடன்

அன்புடன் நக்கி

அணைக்குதம்மா

# நட்சத்திரம்

நட்சத்திரப் பெண்மணிகள் - நீங்கள்
இருளிலே மின்னுவதேன்
அங்குநான் வந்திடவா பறித்துமை
ஆரமாய் சூடிடவா



கண்கள் சிமிட்டுகின்றீர் - நீங்கள்
கதைகள் பேசுகின்றீர்
காற்றிலே ஏறிவந்து நானும்
கவிதை பாடிடவா

உங்கள் ஒளியினிலே - நாங்கள்
உலகை நோக்குகின்றோம்
உம்மோடு நானும் வந்து விண்ணில்
ஒளி வீசி மின்னிடவா

## கும்மி

கொட்டிடுவோம் கும்மி கொட்டிடுவோம்
குழந்தைகள் நாம் கும்மி கொட்டிடுவோம்
ஆனைமுகத்தானை அம்பிகை பாலனை
வணங்கி நாம் கும்மி கொட்டிடுவோம்



நல்ல செயல்களைச் செய்திடுவோம்
நாடு போற்றிட வாழ்ந்திடுவோம்
ஆறுமுகனவன் பாதம் வணங்கியே
அற்புதமாய் கும்மி கொட்டிடுவோம்

எண்ணும் எழுத்தும் கற்றிடுவோம்
பட்டம் பதவிகள் பெற்றிடுவோம்
பரமன் கால்களில் வீழ்ந்து வணங்கியே
பவித்திரமாய் கும்மி கொட்டிடுவோம்

## பூப்பறிப்போம்

பூப்பறிக்கப் போகிறோம்
புறப்பட்டு வாருங்கள்
பூங்காவில் விளையாடி
மகிழ்ந்திட வாருங்கள்



மல்லிகைப் பூப்பறிப்போம்
மாலையாகத் தொடுப்போம்
ரோஜாப்பூ பறித்திடுவோம்
செண்டாக வடிவமைப்போம்

தாமரைப் பூ அல்லிப் பூ
குளத்தினிலே பறித்தெடுப்போம்
செவ்வந்திப் பூ அலரிப் பூ
செடிகளிலே பறித்தெடுப்போம்

## ஐந்து பூக்கள்



அழகான சாடியில்
ஐந்து பூக்கள் உள்ளன
அதிலொன்றை நானெடுத்தால்
எத்தனை பூக்கள் உள்ளன

நான்கு பூக்கள் உள்ளன

அழகான சாடியில்
நான்கு பூக்கள் உள்ளன
அதிலொன்றை நீயெடுத்தால்
எத்தனை பூக்கள் உள்ளன




மூன்று பூக்கள் உள்ளன

அழகான சாடியில்
மூன்று பூக்கள் உள்ளன
அதிலொன்றை அம்மா எடுத்தால்
எத்தனை பூக்கள் உள்ளன

இரண்டு பூக்கள் உள்ளன

அழகான சாடியில்
இரண்டு பூக்கள் உள்ளன
அதிலொன்றை அப்பா எடுத்தால்
எத்தனை பூக்கள் உள்ளன
ஒரு பூ உள்ளது



அழகான சாடியில்
ஒரு பூ உள்ளது
பாப்பா ஒன்றை எடுத்திட்டால்
எத்தனை பூ உள்ளது
ஒரு பூவும் இல்லையே



9 789557 786094

Evergreen Printers 065 2222607